©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 21]

சென்னை, புதன்கிழமை, ஜூன் 2, 2010
வைகாசி 19, திருவள்ளுவர் ஆண்டு – 2041

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (ப) எண் 78, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (B2)த் துறை, 24 பிப்ரவரி 2010.]*

புதுடில்லி, மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தில் (உணவு மற்றும் பொது விநியோகத் துறை) உருவாகி, 11–11–2009ஆம் நாளிட்ட இந்திய அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் II—பிரிவு 3, (ii) உட்பிரிவில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட அறிவிக்கை, பொதுமக்களின் தகவலுக்காக, இதனால் மீண்டும் வெளியிடப்படுகிறது:—

**ஆணை**

**S.O. 2878 (E).**–1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, கீழ்க்காணும் அறிவிக்கையை இதனால் வெளியிடுகிறது.

அதாவது;

**1. குறுந்தலைப்பு, பரப்பு, தொடக்கம் மற்றும் பொருந்தும் தன்மை:**

1. இந்த ஆணை, 2009ஆம் ஆண்டு அரிசி (கம்பெனிகள் அல்லது நிறுவனங்கள் அல்லது தனியார் இருப்பை அறிவித்தல்) ஆணை எனப் பெயர் பெறும்.

2. இது, இந்தியா முழுவதற்கும் பரந்திருக்கும்.

3. இது, ***அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து செயலுக்கு வரும்.

4. இந்திய உணவுக் கழகம் அல்லது அதன் சார்பில் கொள்முதல் செய்கிற யாதொரு நெல் அல்லது அரிசிக்குப் பொருந்தாது.

**2. பொருள் விளக்கங்கள்:**—இந்த ஆணையில் சந்தர்ப்பம் வேறுபொருள் குறித்தாலன்றி, மற்றபடி,

(அ) "இந்திய உணவுக் கழகம்" என்பது 1964ஆம் ஆண்டு இந்திய உணவுக் கழகம் சட்டத்தின் (37/1964) 3ஆம் பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட இந்திய உணவுக் கழகம் எனப் பொருள்படும்;

(ஆ) "படிவம்" என்பது இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு படிவம் எனப் பொருள்படும்;

(இ) "அரிசி" என்பது, பச்சையாக அல்லது ஓரளவு கொதிக்க வைத்த நெல்லிலிருந்து பெறப்பட்ட உமி நீக்கிய முதிர்ந்த தானியங்கள் அல்லது தானியங்களின் துண்டுகள் அல்லது "ஓரிஜா சாடிவ்லின்" எனப் பொருள்படும்; மற்றும்

(ஈ) "நிறுவனம்" என்பது 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (1/1956)கீழ் அறிவிக்கையிடப்பட்ட ஒரு நிறுவனம் எனப் பொருள்படும்.

**3. ஒரு கம்பெனி அல்லது நிறுவனம் அல்லது தனிநபர் அரிசி கொள்முதல் செய்வது தொடர்பான கணக்கு விவர அறிக்கை:**

(1) 2009–10 (அக்டோபர்–செப்டம்பர்) குறுவை அங்காடிப் பருவத்தில் 10,000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக (நாடு முழுவதும் செய்யப்பட்ட மொத்த கொள்முதல்கள்) நெல் கொள்முதல் செய்கிற (அரிசி அடிப்படையில்) யாதொரு கம்பெனி அல்லது நிறுவனம் அல்லது தனிநபர், மத்திய அரசு குறிப்பிடக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில், இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ளவாறான படிவத்தில், கணக்கு விவர அறிக்கை ஒன்றை எந்த மாநிலத்திலிருந்து அதிக அளவு கொள்முதல் செய்யப்பட்டுள்ளதோ அந்த மாநிலத்தின் உணவுத் துறை அரசுச் செயலாளரிடம் அளிக்க வேண்டும்.

(2) நெல் (அரிசி அடிப்படையில்) அல்லது அரிசி கொள்முதல் 25,000 மெட்ரிக் டன்னுக்கு மேற்படுகிற நேர்வில் (நாடு முழுவதும் செய்யப்பட்ட மொத்த கொள்முதல்கள்) படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால இடைவெளிகளில், மேற்சொன்ன படிவத்தில், கணக்கு விவர அறிக்கையை, அரசு சார்புச் செயலாளர், (கொள்கை–III), உணவு மற்றும் பொது விநியோகத் துறை, அறை எண் 288A, கிரிஷி பவன், புதுடில்லி–110 001 (நிகரி எண் 001–23782213, மின் அஞ்சல்–uspy34.fpd@nic.in).

4. 10,000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக நெல் (அரிசி அடிப்படையில்) அல்லது அரிசி கொள்முதல் செய்யப்பட்டதைத் தெரிவித்து, மேற்சொன்ன படிவத்தில், யாதொரு கம்பெனி அல்லது நிறுவனம் அல்லது தனிநபர், கணக்கு விவர அறிக்கைகளைத் தாக்கல் செய்துள்ள சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், தொகுக்கப்பட்ட மாதாந்திர அறிக்கை ஒன்றை, ஒவ்வொரு மாதமும் 10ஆம் தேதிக்குள் உணவு மற்றும் பொது விநியோகத் துறை சார்புச் செயலாளரிடம் (கொள்கை III) அளிக்க வேண்டும்.

(கோப்பு எண் 3(4)/2007–PY. III)

**சிராஜ் ஹுசைன்,**
*இணைச் செயலாளர்.*

**கே. சண்முகம்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**படிவம்**

(3ஆம் பகுதியைக் காண்க)

அரிசி கொள்முதல் தொடர்பாக, கம்பெனி அல்லது நிறுவனம் அல்லது தனிநபர் வாராந்திர அல்லது மாதாந்திர கணக்கு விவர அறிக்கையை அளிப்பதற்கான படிவம்.

-----------------------------ஆம் நாளன்றுள்ளபடி விவர அறிக்கை.

01–10–2009ஆம் நாளிலிருந்து 31–12–2009 வரையிலான கால அளவில், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை 16.00 மணிக்குள் அளிக்கப்பட வேண்டும். அதற்குப் பின்னர், 30–09–2010ஆம் நாள் வரையில், அந்த மாதத்தின் ஒவ்வொரு கடைசி வெள்ளிக்கிழமையன்று அளிக்கப்பட வேண்டும்.

1. கம்பெனியின் அல்லது நிறுவனத்தின் அல்லது தனி நபரின் பெயர், முழு அஞ்சல் முகவரியுடன்:

2. நிரந்தர வருமானவரிக் கணக்கு எண்:

3. ----------------வரையில் கொள்முதல் செய்யப்பட்ட அரிசியின் அல்லது நெல்லின் சேர்ந்து வந்த அளவு (டன்களில்) (மாநில வாரியான விவரங்கள்)

4. அந்த வாரத்தில் அல்லது மாதத்தில் கொள்முதல் செய்தது (டன்களில்)

5. நாளன்றுள்ள நிலவரப்படி இருப்புகளின் விவரங்கள்:–

| *மாநிலம்* | *கிடங்கு அமைந்துள்ள இடம் மற்றும் முகவரி* | *அளவு டன்களில்* |
|---|---|---|
| | | |

கம்பெனியின் அல்லது நிறுவனத்தின் அல்லது தனிநபர் கையொப்பமிட அனுமதியளிக்கப்பட்டவரின் கையொப்பம்.

இடம் :-------------

நாள் :-------------

**சிராஜ் ஹுசைன்,**
*இணைச் செயலாளர்.*

**கே. சண்முகம்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.